# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி “கல்வி”

### கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உயர்கல்வி பெரும் பங்கு வகிக்கின்றது. உயர்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடுகள்தாம் பொருளாதாரத்தில் உயர்ந்து இருக்கின்றன. பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்றால் இந்தியாவும் உயர்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நம் நாட்டில் உயர்கல்வியின் முக்கியத்துவம் அறிந்து (GER – Gross Enrolment Ratio) உயர்கல்வியின் சேர்க்கை விகிதம் அதிகரித்தால் வீடும், சமுதாயமும் ஒருசேர உயரும். பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒரு மாணவன் படிப்பதற்கு 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் டாலர்கள் செலவிடுகின்றனர். இந்தியாவில் அனைத்து மாணவர்களுக்கும் சேர்த்து, படிப்பதற்கு 180 டாலர்கள்மட்டுமே செலவிடுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். இந்நிலை மாறுவதற்காக விஐடி குழுமத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அவர்களின் ஒருநாள் ஊதியத்தை எனது பிறந்தநாளன்று அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்குகின்றனர். இந்த மகத்தான சேவையில் புலவர் வே. பதுமனார் அவர்கள் தன்னுடைய ஓய்வூதியத்திலிருந்து அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு வருடா வருடம் நன்கொடை அளிக்கின்றார். இது போன்று அனைவரும் கல்விக்கு உதவிட முன்வந்தால் உயர்கல்வியில் இந்தியா வளர்ந்த நாடுகளின் பட்டியலில் வந்துவிடும். இந்த ஆண்டுமுதல் திருவண்ணாமலை மாவட்டத்தையும் இத்திட்டத்துடன் இணைத்து உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்விக்கான கல்வி உதவித்தொகை வழங்க இருக்கின்றது. இத்திட்டத்தினைத் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு விரிவாக்கம் செய்ததை ஒட்டி திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இரா. குமரேசன், திரு. டி. அரவிந்த் குமார், திரு. டி.எஸ்.எம். சிவகுமார், திருமதி. கவிதா நவீன்குமார் மற்றும் திரு. எஸ். வெங்கடாசலபதி ஆகியோரை அறங்காவலர்களாக அறக்கட்டளையில் இணைத்துள்ளோம். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டமான வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு அறக்கட்டளை 2012 முதல் 2025 வரை 10,756 மாணவர்களுக்கு ரூபாய். 12 கோடியே 80 லட்சம் கல்வி உதவித்தொகை வழங்கியிருக்கின்றது.

### திரு. இரா. குமரேசன், அறக்கட்டளை உறுப்பினர்



ஒரு தனி மனிதனை, குடும்பத்தை, சமூகத்தினை, நாட்டினை உயர்த்துவது உயர்கல்வியும் அதன் வழியான வேலைவாய்ப்பும், பொருளாதாரமும் தான். உயர்கல்வியே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான அடிப்படையாக அமைகிறது. கல்வியில் வளர்ந்த நாடுகளே பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகளாக உள்ளன. எனவேதான் கல்வியின் அருமையை அதிவீரராம பாண்டிய மன்னன் “கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே” என்று உரைக்கிறார். கல்வியிலே பின்தங்கிய வட ஆர்க்காடு மாவட்டத்தில் உலகப் புகழ் பெற்ற விஐடி கல்வி நிறுவனத்தை நிறுவிய நமது பேரன்பிற்குரிய விஐடி வேந்தர் கல்விக்கோ. முனைவர் கோ. விசுவநாதன் அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் உயர்கல்விப் பெற வேண்டும் என்கின்ற பெருநோக்கத்தோடு அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளையைத் தொடங்கிப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர்கல்விக்கான உதவித்தொகை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளார்கள். நாட்டிற்கே முன்மாதிரியாக உள்ள இந்த சேவையை நாடு முழுவதும் உள்ள சேவை அமைப்புகள் ஏற்றுப் போற்றி மேலும் இதனை விரிவாக்கி உயர்கல்வியில் நாம் விரைந்து முன்னேறப் பாடுபட வேண்டும். மகத்தான இச்சேவையில் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாக எண்ணி மகிழ்கிறேன். உயர்கல்வி வளரட்டும் ! உலகம் செழிக்கட்டும்!.

## திரு. டி. அரவிந்த் குமார், அறக்கட்டளை உறுப்பினர்



ஏழை, எளிய, மாணவர்களின் வாழ்க்கையை உயர்த்தும் நோக்கில், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டண உதவிகள் வழங்கி, அவர்களின் கனவுகளுக்கு நம்பிக்கையின் ஒளியாக விளங்குவது விஐடி-யின் வேந்தர் ஒருவரே. பல கல்வி நிறுவனங்கள் இயங்கினாலும், எங்கள் அன்பிற்குரிய விஐடி நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ. முனைவர் கோ. விசுவநாதன், அவர்கள் “ஏழைகளுக்குச் சேவை செய்வதே உண்மையான கல்வி” என்னும் உயரிய நோக்கத்துடன் இந்தியாவிற்கு முன்மாதிரித் திட்டமாக அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். GV அவர்கள் VDS குடும்பத்தினருக்கும் நன்கு அறிமுகமானவர், உணவுத்துறை அமைச்சராக இருந்த காலம் முதலே மக்கள் நலனில் காட்டிய உதவி மனப்பான்மை, அவரது மனிதநேயத்தின் சிறப்பை வெளிப்படுத்துகிறது. அத்தகைய சேவை உணர்வு இன்றும் தொடர்வது ஒரு உண்மையான மக்கள் தலைவரின் அடையாளமாகும். அத்தகைய உயரிய பணியை, அதே அர்ப்பணிப்புடனும், தியாக உணர்வுடனும் தொடர்ந்து முன்னெடுத்து வருவதை அவர்களின் புதல்வர்கள் இந்தக் கல்விச் சேவைப் பயணத்திற்கு நன்கொடை அளித்து மேலும் பெருமை சேர்க்கின்றனர். உண்மையில், GV அவர்கள் கல்வியாளர் மட்டுமல்ல - ஒரு மனிதநேயப் போராளி, தொலைநோக்குத் தலைவர், பல தலைமுறைகளை மாற்றும் மகத்தான தலைவர், அவர்களுடன் இந்த மகத்தானப் பணியில் என்னுடைய சிறிய பங்களிப்பு இருப்பதை நினைத்துப் பெருமிதம் கொள்கின்றேன்.

## கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு மாணவர்களின் இருப்பிடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்தல்

2025 - 26 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு, மாணவர்களின் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை அறிந்துகொள்ள மாணவர்கள் இருப்பிடத்திற்கு நேரில் சென்று அறக்கட்டளை அலுவலர்கள் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வு 2025 ஜூலை 01 முதல் 2025 நவம்பர் 15 வரை நடைபெற்றது. இதில் வேலூர், காட்பாடி, கீ.வ. குப்பம், குடியாத்தம், பேர்ணாம்பட்டு, அணைக்கட்டு, கணியம்பாடி, மாதனூர், ஆலங்காயம், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஆர்க்காடு, திமிரி, வாலாஜா, காவேரிப்பாக்கம், சோளிங்கர், நெமிலி, அரக்கோணம் ஒன்றியம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திற்குட்பட்ட அனக்காவூர், ஆரணி, செங்கம், சேத்பட், செய்யாறு, கலசப்பாக்கம், பெரணமல்லூர், போளூர், புதுப்பாளையம், தெள்ளாறு, துரிஞ்சாபுரம், வந்தவாசி, மேற்கு ஆரணி ஒன்றியத்திற்குட்பட்ட 1656 மாணவர்களின் இருப்பிடத்திற்குச் சென்று களப்பணி செய்து, தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.



## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்குதல்





2025 - 26 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி 2026 நவம்பர் 27 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் விஐடி துணைத் தலைவர் முனைவர். சேகர் விசுவநாதன், விஐடி நிர்வாக இயக்குநர், முனைவர் சந்தியா பெண்டாரெட்டி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள், மற்றும் நிதிக்குழுத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 1,061 மாணவ மாணவியர்க்கு ரூபாய். 97 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.







4 Dinakaran Vellore 30.11.2025 தினகரன்

வேலூரில் 1100 மாணவர்களுக்கு ரூ.1 கோடி கல்வி உதவித்தொகை

**கல்வியில் உயர்ந்தால் மொத்த வருவாயும், தனி நபர் வருமானமும் உயரும்**

விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் பேச்சு



உள் வலம்

கல்வியை எல்லோருக்கும் கொடுத்தால் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறையும்



THE NEW SUNDAY EXPRESS

03 VELLORE SUNDAY 30.11.2025

**Only education can help improve GDP, per capita income, says VIT Chancellor**

EXPRESS NEWS SERVICE @ Vellore



தினமலர் வேலூர் 30.11.2025 5

**பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைக்க எல்லாருக்கும் கல்வி**

1,100 பேருக்கு உதவித்தொகை வழங்கி விஐடி வேந்தர் வலியுறுத்தல்




## SHINE பகுதி 17 நிறைவு விழா SHINE பகுதி 18 தொடக்க விழா





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் Pearltri Foundation, சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE பகுதி 17 நிறைவு மற்றும் SHINE பகுதி 18 தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2025 ஜுலை 04, அன்று நடைபெற்றது. விஐடி துணை வேந்தர் முனைவர். வி.எஸ். காஞ்சனா பாஸ்கரன் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். Talent Nurturing, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், மூத்த மேலாளர், திருமதி. ஜெயா எத்திராஜ், CSR ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Pearltri Foundation உறுப்பினர், பொது மேலாளர் திரு. எஸ். சாத்தப்பன், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் மூத்த மேலாளர் திரு. நவீன், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உதவித் திட்ட இயக்குநர் முனைவர். ப. சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.





## SHINE பகுதி 18 நிறைவு விழா SHINE பகுதி 19 தொடக்க விழா





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை வேலூர், Pearltri Foundation மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE 18 பகுதி நிறைவு மற்றும் SHINE19 பகுதி தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2025 அக்டோபர் 07, அன்று நடைபெற்றது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர் ஜோதிடர். திரு. இரா. குமரேசன் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். Talent Nurturing ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், மூத்த மேலாளர் திருமதி. ஜெயா எத்திராஜ் CSR, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Pearltri Foundation உறுப்பினர், பொது மேலாளர் திரு. எஸ். சாத்தப்பன் மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Sr. HR Partner திருமதி. ஸ்னிக்தா அகர்வால் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி







அறக்கட்டளை, உதவித் திட்ட இயக்குநர் முனைவர். ப. சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

**கமலி க**



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, காங்கேயநல்லூரில் வசிக்கிறேன். அப்பா தனியார் பள்ளியில் நான்கு சக்கர வாகன ஓட்டுநராக வேலை செய்கிறார். திருமுருக கிருபானந்த வாரியார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளயில் 12ஆம் வகுப்பில் 68 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். உயர்கல்வி பயில ஆக்ஸிலியம் கல்லூரியில் பி.ஏ. ஆங்கிலம் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக உறவினர் மூலம் அறிந்து அறக்கட்டளையில் உதவித் தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எங்கள் இருப்பிடத்திற்கு வருகை தந்து விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். மேற்கொண்டு எல். எல். பி சட்டம் பயின்று தற்பொழுது வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில், சட்ட ஆலோசகராகப் பணிபுரிகிறேன். தற்பொழுது நல்ல பணியில் இருப்பதற்கும் குடும்பப் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து என் உயர்கல்விக் கனவை நனவாக்கிய அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் போன்ற மாணவர்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜெகன் ந**



நான் வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, கார்ணாம்பட்டுப் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய பெற்றோர் விவசாய வேலை செய்கின்றனர். ஆர்க்காடு இராமகிருஷ்ணா பெல் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 84 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதைத் தமிழ் நாளிதழ்களால் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். எம்.டெக். இன்டெக்கிரேட் மென்பொருள் பொறியாளர் படிப்பில் விஐடி, வேலூரில் சேர்ந்த எனக்கு அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்தும் வீட்டிற்கு நேரடியாக வருகை புரிந்தும் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்தும், எனக்கு உயர்கல்விப் பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் நிர்வாகியாகப் பணிபுரிகிறேன். எனக்குக் கல்வி உதவித் தொகை வழங்கிய, "அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு" என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வினிதா வி**

என்னுடைய சிறுவயதிலேயே பெற்றோர் இறந்துவிட்டனர். என்னுடைய பாட்டி, வீட்டுவேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். திருப்பத்தூர் மாவட்டம், பாச்சல் பகுதியில் வசிக்கிறேன். திருப்பத்தூர் மேரி இம்மாக்குலேட் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 92 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத்

தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை எனது நண்பர்கள் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் பி.சி.ஏ. படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையினர் நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். மற்றும் எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு முடித்துவிட்டுத் தற்பொழுது நான் ஓசூர், தனியார் நிறுவனத்தில் நிர்வாகியாகப் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக்கும், என் இலக்குகளை அடைவதிலும் உறுதுணையாக இருந்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு மிகவும் நன்றி உள்ளவளாக இருப்பேன். மேலும் என் போன்ற மாணவர்களின் உயர்கல்விக்கு அறக்கட்டளையைப் பரிந்துரை செய்கிறேன்.



**செல்வரங்கம் செ**



என்னுடைய அப்பா, அம்மா இருவரும் விவசாய வேலை செய்து என்னைப் படிக்க வைத்தனர். திருவண்ணாமலை மாவட்டம், அரிதரிமங்கலம் பகுதியில் வசிக்கிறேன். சவ்வாது மலை குனிகாந்தூர் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 89 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை நண்பர்கள் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். நான் அரியலூர் மாவட்டம் தட்சனூர், மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.எஸ்.சி. கணிதம் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தாலுக்காவில், கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிகிறேன். எனக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி என் உயர்கல்விக் கனவை நனவாக்கியதற்கும், தற்பொழுது அரசுப் பணியில் வேலைக்குச் சென்று என்னுடைய குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தியதற்கும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


**தாட்சாயணி இரா**




நான் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுக்கா, சிப்காட் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய சிறுவயதிலேயே அப்பா இறந்துவிட்டார். அம்மா தனியார் ஷூ நிறுவனத்தில் பணியாளராக வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். இராணிப்பேட்டை எல்.எப்.சி. பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 87 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை என் பள்ளியின் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில விஐடியில் எம்.எஸ். மென்பொருள் பொறியாளர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது தனியார் நிறுவனத்தில் மூத்த நிர்வாகியாகப் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக் கனவை நனவாக்கிய அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்வி உதவித்தொகை பெற்றோர்: 2012 - 2026: 10,756


### பாலினம்




### முதல்தலைமுறைப் பட்டதாரிகள்





### பாடப்பிரிவுகள்




- கலை / அறிவியல்
- பொறியியல் / தொழிற்கல்வி
- மருத்துவம்
- செவிலியர்
- துணை மருத்துவம்
- ஆசிரியர் பயிற்சி, ஹோட்டல் மேனேஜ்மெண்ட்
- மற்றவை

### பள்ளி வாரியாகப் பயனாளிகள்




- அரசுப் பள்ளி மாணவர்கள்
- அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள்
- தனியார் பள்ளி மாணவர்கள்

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கியோர்

### விஐடி குழுமம் மற்றும் தனியார் நிறுவனங்கள் நன்கொடை





அறக்கட்டளைத் தலைவர், விஐடி பல்கலைக்கழகத்தின் நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்களின் 87 ஆவது பிறந்தநாள் விழாவில் வேலூர், சென்னை, அமராவதி (ஆந்திரப் பிரதேசம்) போபால் (மத்தியப் பிரதேசம்) மற்றும் பெங்களூரு வளாகத்தின் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஒரு நாள் ஊதியத்தை அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கினார்கள்.







### அறக்கட்டளை உறுப்பினர்கள்

முனைவர். **கோ. விசுவநாதன்,** தலைவர், திரு. **ஜே. இலட்சுமணன்,** செயலாளர்
திரு. **கே. ஜவரிலால் ஜெயின்,** பொருளாளர், புலவர். **வே. பதுமனார்,** திருமதி. **மயிலாம்பிகை குமரகுரு**
திரு. **சி. கைசர் அஹமது,** திரு. **இர்ஷாத் அஹமது மெக்கா,** திரு. **கே.எம். தேவராஜ்**
திரு. **கே.எம்.ஜி. இராஜேந்திரன்,** திரு. **என். பாஸ்கரன்,** டாக்டர். **எஸ். நர்மதா அசோக்**
திரு. **பாலாஜி லோகநாதன்,** திருமதி. **அஞ்சு சக்திவேல்,** திரு. **ருக்ஜி கே. இராஜேஷ் குமார்**
பேரா. முனைவர். **இரத்தின நடராஜன்,** திரு. **இரா. குமரேசன்,** திரு. **டி. அரவிந்த் குமார்**
திரு. **டி.எஸ்.எம். சிவகுமார்,** திருமதி. **கவிதா நவீன்குமார்,** திரு. **எஸ். வெங்கடாசலபதி**


அறக்கட்டளையின் இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

உதவித் திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர் பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

Universal Higher Education Trust (UHET),
A/c. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFS Code : IDIB000V086

DONATE

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**